**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 151** **நாள்:28.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஸ்வட்ச் சர்வேக்ஷன்–2019 (Swachh Survekshan) தரவரிசை மதிப்பீடு குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் ஸ்வட்ச் சர்வேக்ஷன்–2019 (Swachh Survekshan) தரவரிசை மதிப்பீடு குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இக்கூட்டத்தில் செங்கல்பட்டு, வேலூர், சேலம், புதுச்சேரி மாநகராட்சி மற்றும் பேரூராட்சி இயக்கத்திலிருந்து மொத்தம் 298 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வருடமும் தூய்மை நகரத்திற்கான தரவரிசை பட்டியல் மத்திய நகர்ப்புற மற்றும் வீட்டுவசதி துறையால் வெளியிடப்படுகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஸ்வட்ச் சர்வேக்ஷன் (Swachh Survekshan)-2017ல் 5 இலட்சத்திற்கு மேலான மக்கள் தொகையுள்ள 500 நகரங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி 235வது இடத்தை பெற்றது. ஆனால், ஸ்வட்ச் சர்வேக்ஷன் (Swachh Survekshan)-2018 தரவரிசையை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தரவரிசையில் 100வது இடத்தை பெற்றது.

மத்திய நகர்ப்புற மற்றும் வீட்டுவசதி அமைச்சகத்தின் தேசிய தூய்மை இந்தியா திட்ட மேலாண்மை அலகு ஆலோசகர் டாக்டர் சக்தீஸ்வரன் அவர்கள் தரவரிசையில் அதிக மதிப்பெண் பெறுவது எப்படி என விரிவாக விளக்கினார். மேலும், சேவை நிலை முன்னேற்றம் (Service Level Progress) நேரடி கண்காணிப்பு (Direct Observation) மற்றும் குடிமக்களின் கருத்து (Citizen Feedback) போன்ற தலைப்புகளின் கீழ் அதிக மதிப்பெண் பெறுவது குறித்து விரிவாக விளக்கப்பட்டு, முதன்மை நிலை அடைய பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) திரு.எஸ்.சக்திமணிகண்டன், நகராட்சி நிர்வாக ஆணையகத்தின் மேற்பார்வை பொறியாளர் திரு.அன்பழகன், பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர் திருமதி விஜஷலா, நகராட்சி நிர்வாக ஆணையகத்தின் உதவி செயற்பொறியாளர் திரு.சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**